பல வயதினரைக் கொண்ட வகுப்புகள்: பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல் தாள்

பல வயதினரைக் கொண்ட வகுப்புகள் என்றால் என்ன?

பல வயதினரைக் கொண்ட வகுப்புகளில், ஒன்றுக்கும் மேற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றாகக் கற்பார்கள். இந்த வகுப்புகளில், ஒரே பாடத்திட்ட நிலையிலுள்ள பல்வேறு ஆண்டு மாணவர்களும் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட பாடத்திட்ட நிலைகளைச் சேர்ந்த மாணவர்களும் இடம்பெறலாம்.

NSW பாடத்திட்டம் பின்வரும் நிலைகளாக (Stages) வகைப்படுத்தப்பட்டுள்ளது:

ஆரம்ப நிலை 1: மழலையர் வகுப்பு

நிலை 1: ஆண்டு 1 மற்றும் ஆண்டு 2

நிலை 2: ஆண்டு 3 மற்றும் ஆண்டு 4

நிலை 3: ஆண்டு 5 மற்றும் ஆண்டு 6

மாணவர்கள் பல வயதினரைக் கொண்ட வகுப்பில் இருந்தாலும் அல்லது ஒரே ஆண்டு மாணவர்கள் கொண்ட வகுப்பில் இருந்தாலும், தங்களுக்கு உரிய பாடத்திட்ட நிலையின்படி (Curriculum Stage) கற்றுக்கொள்கிறார்கள். உதாரணமாக, ஆண்டு 1/2 மாணவர்கள் இணைந்த வகுப்பில் (Year 1/2) பயிலும் 2ஆம் ஆண்டு மாணவர், நிலை 1-க்கான 2ஆம் ஆண்டு பாடத்திட்டத்தையே கற்றுக்கொள்வார். அதேபோல், ஆண்டு 4/5/6 மாணவர்கள் இணைந்த வகுப்பில் (Year 4/5/6) பயிலும் 4ஆம் ஆண்டு மாணவர், நிலை 2-க்கான 4ஆம் ஆண்டு பாடத்திட்டத்தையே கற்றுக்கொள்வார்.

என் குழந்தையின் பள்ளியில் ஏன் பல வயதினரைக் கொண்ட வகுப்புகள் இருக்கலாம்?

பல வயதினரைக் கொண்ட வகுப்புகள் ஆஸ்திரேலியப் பள்ளிகளில் பொதுவாகக் காணப்படுகின்றன. இத்தகைய வகுப்புகள் பின்வரும் காரணங்களால் அமைக்கப்படலாம்:

- **மாணவர் சேர்க்கை நிலவரங்கள்** – ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை மாறுபடலாம். பல வயதினரைக் கொண்ட வகுப்புகள் மூலம் பள்ளிகள் சமநிலையான வகுப்பு அளவுகளை உருவாக்க முடியும்.
- **கல்வி சார்ந்த நன்மைகள்** – மாணவர்களின் கற்றல் மற்றும் சமூகத் திறன்களுக்கு பல்வேறு நன்மைகளை வழங்கக்கூடியதால், பள்ளிகள் இத்தகைய வகுப்பு அமைப்புகளைப் பயன்படுத்தலாம்.
- **சிறிய பள்ளிகள்** – சிறிய மற்றும் கிராமப்புறப் பள்ளிகளில் பல வயதினரைக் கொண்ட வகுப்புகள் பொதுவாகக் காணப்படுகின்றன. இதன் மூலம் வகுப்புகளில் போதுமான எண்ணிக்கையிலான மாணவர்களைச் சேர்க்க முடிகிறது.

CC BY

பல வயதினரைக் கொண்ட வகுப்பில் மாணவர்கள் எவ்வாறு சேர்க்கப்படுகிறார்கள்?

மாணவர்களை வகுப்புகளில் சேர்ப்பது தொடர்பாக, பள்ளி முதல்வர்களும் ஆசிரியர்களும் பின்வரும் அம்சங்களைக் கருத்தில் கொண்டு முடிவு செய்கிறார்கள்:

- மாணவர்களின் கற்றல் மற்றும் ஈடுபாடு.
- பள்ளி முழுவதும் உள்ள மாணவர்களின் கலவை.
- மாணவர்களின் திறன்கள், ஆர்வங்கள் மற்றும் கற்றல் தேவைகளுக்கு இடையிலான சமநிலை.
- சமூக நலன் மற்றும் நட்புறவுகள்.
- பாடத்திட்டத்தைத் திறம்படக் கற்பித்தல்.
- வகுப்புகளுக்கு இடையே தேவையான கூடுதல் ஆதரவுதவி மற்றும் கற்றல் வசதிகளை ஒழுங்குபடுத்துதல்.

மாணவர்களின் கற்றலுக்கு ஆதரவுதவி அளிக்கும் வகையில், அவர்களின் நலனையும் தேவைகளையும் கருத்தில் கொண்டே வகுப்பு ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. ஒரு மாணவர் பல வயதினரைக் கொண்ட வகுப்பில் சேர்க்கப்படுவது, அவர் பாடத்திட்ட நிலைக்கான எதிர்பார்ப்புகளை விட முன்னிலையில் இருக்கிறார் அல்லது பின்தங்கியிருக்கிறார் என்று **அர்த்தமல்ல**.

பல வயதினரைக் கொண்ட வகுப்புகளில் கற்றல் எவ்வாறு நடைபெறுகிறது?

ஆசிரியர்கள் NSW பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கற்றல் நடவடிக்கைகளைத் திட்டமிடுகின்றனர். மாணவர்களின் தனிப்பட்ட கற்றல் தேவைகளுக்கு ஏற்ப தங்களின் கற்பித்தல் முறைகளையும் மாற்றியமைக்கின்றனர். இது **வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் (differentiation)** எனப்படுகிறது. மாணவர்கள் வெவ்வேறு வேகங்களில் கற்றுக்கொள்வதால், அனைத்து வகுப்பறைகளிலும் வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பல வயதினரைக் கொண்ட வகுப்புகளில், மாணவர்கள் தங்கள் கற்றலில் முன்னேறுவதற்கு ஆசிரியர்கள் பல்வேறு கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துகின்றனர். இதில் பின்வருவன அடங்கும்:

- சில கற்றல் நடவடிக்கைகளுக்காக முழு வகுப்பினரையும் ஒன்றாகக் கற்பித்தல்
- குறிப்பிட்ட கற்றல் நடவடிக்கைகளில் சிறு குழுக்களாகப் பணியாற்றுதல்
- மாணவர்களுக்கு சவாலையோ ஆதரவையோ வழங்கும் வகையில் கற்றலை வேறுபடுத்துதல்
- நடவடிக்கைகள், கற்றல் வளங்கள் அல்லது மாணவர்கள் தங்கள் கற்றலை வெளிப்படுத்தும் முறைகளை மாற்றியமைத்தல்.

உங்கள் கேள்விகளுக்கான பதில்கள்

எனது குழந்தைக்கு ஆசிரியரிடமிருந்து குறைவான கவனம் கிடைக்குமா?

ஒரு மாணவர் ஆசிரியரின் கவனத்தை எவ்வளவு பெறுகிறார் என்பதை வகுப்பு அமைப்பு தீர்மானிப்பதில்லை. ஒவ்வொரு மாணவரும் வெவ்வேறு கற்றல் நிலைகளில் இருப்பதை கருத்தில் கொண்டே ஆசிரியர்கள் பாடங்களைத் திட்டமிடுகின்றனர். ஒரே ஆண்டு மாணவர்கள் மட்டுமே உள்ள வகுப்புகளிலும் இதே அணுகுமுறை பின்பற்றப்படுகிறது.

எனது குழந்தை ஏற்கனவே கற்றுக்கொண்ட பாடங்களை மீண்டும் கற்க வேண்டியிருக்குமா?

ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கண்காணித்து, அதற்கேற்ப தங்கள் பாடங்களைத் திட்டமிடுவார்கள். மாணவர்கள் தங்களுக்குப் பொருத்தமான பாடத்திட்டத்தின்படி தொடர்ந்து கற்றுக்கொள்வதுடன், புதிய கற்றலுக்கான அடுத்த கட்டத்திற்குச் செல்லவும் தேவையான ஆதரவுதவி வழங்கப்படும்.

எனது குழந்தை தனது நண்பர்களைத் தொடர்ந்து சந்திக்க முடியுமா?

வகுப்புகளை அமைக்கும்போது, பள்ளிகள் மாணவர்களின் நட்புறவுகளையும் கருத்தில் கொள்கின்றன. இடைவேளைகளிலும், பள்ளி முழுவதும் நடைபெறும் நடவடிக்கைகளிலும் மாணவர்கள் தங்களது நண்பர்களுடன் தொடர்பில் இருக்கவும் முடியும்.

பல வயது மாணவர்கள் கொண்ட வகுப்புகள் எனது குழந்தைக்குக் கற்பிக்கும் முறையைப் பாதிக்குமா?

ஆசிரியர்கள் தெளிவான கற்பித்தல் முறையைப் பயன்படுத்தி, மாணவர்களின் கற்றல், மதிப்பீட்டு முடிவுகள், திறன்கள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப கற்பித்தலை மாற்றியமைப்பார்கள். இது அனைத்து வகையான வகுப்புகளிலும் நடைபெறும்.

எனது குழந்தைக்கு மேம்பட்ட கற்றல் அல்லது பொருத்தமான சவால்களுக்கான வாய்ப்புகள் கிடைக்குமா?

NSW அரசுப் பள்ளிகள் அனைத்தும், துறையின் அதிஉயர் உள்ளாற்றல்மிக்க மற்றும் மேன்மைத்திறன் வாய்ந்த மாணவர்களுக்கான கல்விக் கொள்கையின் கீழ், அதிஉயர் உள்ளாற்றல்மிக்க மற்றும் மேன்மைத்திறன் வாய்ந்த மாணவர்களுக்கு ஆதரவு வழங்குகின்றன. ஆசிரியர்கள் மாணவர்களின் திறன்களைக் கண்டறிந்து, அவற்றுக்கு ஏற்ற மேம்பட்ட கற்றல் அல்லது விரிவாக்கச் செயல்பாடுகளைத் திட்டமிடுவார்கள். இது அனைத்து வகையான வகுப்புகளிலும் நடைபெறும். பல வயது மாணவர்கள் கொண்ட வகுப்பில் சேர்க்கப்படுவது இந்த வாய்ப்புகளை மட்டுப்படுத்தாது.

பல வயது மாணவர்கள் கொண்ட வகுப்பில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு எவ்வாறு ஆதரவு வழங்கப்படுகிறது?

NSW அரசுப் பள்ளிகளில், பல வயது மாணவர்கள் கொண்ட வகுப்புகள் உட்பட அனைத்து வகுப்புகளிலும், பொதுவகுப்பு அல்லது ஆதரவுதவி வகுப்பு அமைப்பாக இருந்தாலும், மாற்றுத்திறனாளி மாணவர்கள் கற்றலில் முழுமையாகப் பங்கேற்க ஆதரவு வழங்கப்படுகிறது. ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவரின் வலிமைகள், தேவைகள் மற்றும் இலக்குகளைப் புரிந்துகொண்டு, அவர்களின் வெற்றிக்கு உதவும் வகையில் வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் முறைகள், நியாயமான மாற்றங்கள் மற்றும் தேவையானபோது தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் மற்றும் ஆதரவுதவி திட்டத்தைப் பயன்படுத்துவார்கள். பொருத்தமான இடங்களில், இந்த முடிவுகள் மாணவர்களுடனும், பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்களுடனும், தொடர்புடைய பள்ளிப் பணியாளர்களுடனும் இணைந்து எடுக்கப்படும். பல வயது மாணவர்கள் கொண்ட வகுப்பில் சேர்க்கப்படுவது, மாணவருக்கான தனிப்பட்ட ஆதரவுதவி ஏற்பாடுகளை மாற்றாது.

ஆய்வு என்ன கூறுகிறது?

மாணவர்களின் கற்றலில் பள்ளிக்குள் ஏற்படுத்தப்படும் முக்கியமான தாக்கங்களில் உயர்தரமான கற்பித்தல் முதன்மையானது. வகுப்பின் அளவு, வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் கலவை அல்லது பிற வளங்களைவிட, உயர்தரமான கற்பித்தல் மாணவர்களின் கற்றலில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறது. கற்பித்தல் முறையாகத் திட்டமிடப்பட்டு, மாணவர்களுக்கு உரிய ஆதரவுதவி வழங்கப்படும்போது, பல வயதினரைக் கொண்ட வகுப்புகளில் (multi-age classes) பயிலும் மாணவர்கள், ஒரே வயது மாணவர்களைக் கொண்ட வகுப்புகளில் (single-year classes) பயிலும் மாணவர்களுக்கு இணையான கல்வி முடிவுகளைப் பெறுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பல வயதினரைக் கொண்ட வகுப்புகள், வெவ்வேறு வயது மற்றும் திறன்களைக் கொண்ட சக மாணவர்களுடன் இணைந்து செயல்படுதல், அவர்களைப் புரிந்துகொள்ளுதல் மற்றும் நல்ல உறவுகளை வளர்த்துக்கொள்ளுதல் போன்ற திறன்களையும் மாணவர்கள் வளர்த்துக்கொள்ள உதவும்.

தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவை

மேலும் தகவல்களைப் பெற விரும்பினால், பள்ளி முதல்வரைத் தொடர்புகொள்ளவும். உங்கள் கேள்வி அல்லது விசாரணைக்கு உதவியாக உரைபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், 131 450 என்ற எண்ணில் தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவையை (Telephone Interpreter Service) அழைத்து, உங்கள் மொழியில் உரைபெயர்ப்பாளர் ஒருவர் தேவை என்று தெரிவிக்கவும். நீங்கள் அழைக்க விரும்பும் தொலைபேசி எண்ணை சேவைப் பணியாளரிடம் தெரிவிக்கவும். அவர் உங்கள் அழைப்பில் உரைபெயர்ப்பாளர் ஒருவரை இணைத்து, உரையாடலுக்கு உதவுவார். இந்தச் சேவைக்கு உங்களிடம் எந்தக் கட்டணமும் வசூலிக்கப்பட மாட்டாது